# சென்னையில் தலைவர்கள் கைது.

## நகர மெங்கும் பரபரப்பு.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 5.

3—6—38-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு 10½ மணிக்கு சென்னை தியாகராய நகரில் தலைவர் சி. டி. நாயகம், சுவாமி சண்முகானந்தர் இவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அன்று சாயங்காலம் 6-45 மணிக்கு, மந்திரி இராஜகோபாலாச்சாரியார் வீட்டுக்கெதிரில் உண்ணாவிரத சத்தியாக்கிரகம் இருந்து வந்த பல்லடம் பொன்னுச்சாமியும் கைது செய்யப்பட்டனர். அன்றியும் தோழர் சி. டி. நாயகம் அவர்களின் ஆபீஸ் ரூமும் சீல்வைத்துக் காவல் வைக்கப்பட்டது. அடுத்த நாள் காலையில் இந்தச் செய்தி தெரிந்தவுடன் ஜனங்களுக்கிடையே மிக்க பரபரப்பு ஏற்பட்டது. தியாகராய நகரில் போலீஸ் பாதுகாப்பு பலமாக இருந்தது. உடனே தஞ்சை மதுரை, திருச்சி முதலான தமிழ்நாட்டின் முக்கிய இடங்களுக்கு தந்தி மூலமாக செய்திகள் அனுப்பப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் வழக்கு நேற்று (4-6-38) சனிக்கிழமை பகல் 12½ மணிக்கு பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தோழர் அபாஸ் ஆலி முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. 1932ம் வருஷத்து கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் ஆக்ட், செக்ஷன் 7 (1), படி வழக்குத் தொடரப்பட்டது. கோர்டில் தலைவர்கள் ஈ. வெ. ரா. டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியன், கே. ஏ. பி. விஸ்வநாதம், கே. எம். பாலசுப்பிரமணியம், குஞ்சிதம் அம்மாள், சிவராஜ், நாகைமணி, டி. எஸ். பழனியப்பப் பிள்ளை முதலியவர்கள் வந்திருந்தார்கள். போலீஸ் தரப்பில் கைது செய்யப்பட்டவர்கள் மூவரையும் ரிமாண்டில் வைக்கவேண்டும் என்றும் வெளியில் விடக்கூடாதென்றும் பலமாக வாதிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக தோழர் சடகோப ராமானுஜம் அவர்கள் பேசினார். கடைசியாக மாஜிஸ்ட்ரேட் அவர்கள் ஆளுக்கு 1000 ரூபா செக்யூரிட்டியும் 250 ரூபாய்க்கு இரண்டு ஜாமீனும் கொடுக்கவேண்டும் என்று வழக்கு நடைபெறுகிறவரையில் அதாவது 17-6-38 வரையில் தங்கள் இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக்கூடாதென்றும் உத்தரவிட்டார்.

பல்லடம் பொன்னுசாமி உண்ணாவிரதத்தையும் சத்தியாக்கிரகத்தையும் விடமுடியாதென்று சொன்னதின் மேல் அவரை 17-6-38 வரையில் ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

நேற்று (5-6-38) மாலை தோழர் ஸி. டி. நாயகம் அவர்களுன் ஆபீஸ் ரூம் போலீசாரால் சோதனை செய்யப்பட்டது.

மற்றப்படி, பொதுக் கூட்டங்களும் சொற்பொழிவுகளும் பிரசாரங்களும் வழக்கம் போல் நடந்து கொண்டிருக்கின்றன. முத்தியாலுப் பேட்டை நுங்கம்பாக்கம் என்னும் இரண்டு இடங்களிலும் நேற்று பெருங்கூட்டங்கள் நடைபெற்றன. 36 நாட்களாக உண்ணா நோன்பிருக்கும் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள், மிக்க பலஹீனமான நிலைமையிலிருந்தும், ஷை இரண்டு கூட்டங்களுக்கும் சென்று சற்று நேரம் இருந்து விட்டு வந்தார். இளைப்பும் களைப்பும் அதிகமாக இருக்கிறபடியால் கூட்டங்களில் அதிகநேரம் தாங்கியிருக்க முடியவில்லை. இன்று (5-6-38) பீபில்ஸ் பார்க்கில் இருந்து புறப்படும் மாபெரும் ஊர்வலத்தில் தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் கலந்து கொள்வார். சென்னை ஐக்கோர்ட்டு கடற்கரையில் கூடுகிற மாபெரும் கூட்டத்தில் தலைவர்கள் ஈ. வெ. ரா., கே. ஏ. பி. விஸ்வநாதம், சோமசுந்தர பாரதியார் முதலியவர்கள் பேசுவார்கள்.